SRI NIGAMANTA MAHĀDESIKA'S

PARAMATA - BHANGAM

PART I

WITH

DESIKĀSAYA PRAKĀSA

(COMMENTARY)

BY

VEDĀNTAVĀVADUKA VILLIVALAM VĀTSYA
NĀRĀYANĀCHĀRYA SWĀMY

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

பரமத-பங்கம்

முதற் பாகம்

வேதாந்தவாவதூக வில்லிவலம் வாத்ஸ்ய நாராயணாசார்ய ஸ்வாமி இயற்றிய

தேசிகாசய ப்ரகாசம்

என்னும் வியாக்யானத்துடன் கூடியது.

1979

श्रीः

श्रीमते निगमान्त महादेशिकाय नमः

श्रीमान्वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥



பொன்னயிந்தை நகரில் முன்னாள் புணராத
பரமதப் போர்
புரிந்த ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன்.

श्रीः

श्रीकवितार्किकसिंह - सर्वतन्त्रस्वतन्त्र - श्रीमद्वेङ्कटनाथ

श्रीमद्वेदान्तदेशिकविरचितः

परमतभङ्गः

(वैभाषिकभङ्गाधिकारान्तः प्रथमो भागः)

श्रीमदहोबलमठीयास्थानविदुषा, वेदान्तवावदूकेन, विद्वन्मणिना, न्यायवेदान्तकेसरिणा, विल्लिवलाभिजनेन

वात्स्य श्रीनारायणाचार्येण - विरचितया

देशिकाशयप्रकाशाभिख्यया व्याख्यया सहितः

विश्वविख्यातवैभवानां - पण्डितच्छात्रबृन्दभृङ्गावळीसंसेव्यमानपादपद्मानां

श्रीमदहोबलमठीय द्वाचत्वारिंशपट्टे मूर्धाभिषिक्तानां - श्रीमद्वेदमार्गेत्यादि - श्रीलक्ष्मीनृसिंह

दिव्यपादुकासेवक श्रीवणशठकोप श्री श्रीरङ्गशठकोपयतीन्द्रमहादेशिकानां

शताब्दीपूर्तिमहोत्सवे - काळयुक्त मकर - उत्तराषाढासु

प्रकाशितः विजयतेतमाम्.

27 - 1 - 1979

விலை ரூ. 50.00

தபால் சார்ஜ் வேறு



குலதெய்வமும்-குலகுருக்களும்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ।

ஸ்ரீமத் வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய, ஸ்ரீபகவத் ராமாநுஜஸித்தாந்த நிர்த்தாரணஸார்வபௌம, ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவேதாந்ததேசிக யதீந்த்ர மஹா தேசிகன் அநுக்ரஹித்தருளிய

மங்களா சாஸந ஸ்ரீமுகம்

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன், ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்த ரக்ஷணத்திற்காக அநுக்ரஹித்த அநேகக்ரந்தங்களில், "பரமதபங்கம்" என்கிற அபூர்வமான க்ரந்தம் ஒன்று உண்டு. அந்தக்ரந்தம் மணிப்ரவாளமாக (தமிழும் ஸம்ஸ்க்ருதமும் கலந்த பாஷையில்) அநுக்ரஹிக்கப்பட்டுள்ளது. அந்தக்ரந்தத்திற்கு, ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீஸ்ரீரங்கசடகோபய தீந்த்ரமஹாதேசிகனால் அருளப்பட்ட "வேதாந்தவாவதூகர்" என்கிற பிருதை உடைய, தர்க்கசாஸ்த்ர பாரங்கதரான, வில்லிவலம் நாராயணாசார்யர் என்கிற நம்முடைய ஸ்ரீமடத்தின் ஆஸ்தாநவித்வான், ஸம்ஸ்க்ருதவ்யாக்யானம் வித்வன் மநோரஞ்ஜகமாகப் பண்ணியிருப்பதைப் பார்த்து பரமஸந்தோஷமடைந்தோம்.

मणिप्रवालरूपेण वेदान्तगुरुणा कृतम् ।
त्रैय्यन्त वावदूकस्य तर्कशास्त्रार्थवेदिनः ॥
नारायणार्यविदुषः संस्कृतव्याख्यया सह ।
परेषां मतभङ्गाख्यशास्त्रं जीयात्सतां मुदे ॥

ஸ்ரீ:ரங்கோவஸ்ரீ:

(முகாம்,) முக்கூர் அக்ரஹாரம்.
1 – 2 – 1978

श्रीः

श्रीमते रामानुजाय नमः ।

न्यायमीमांसाशिरोमणि - उभयमीमांसावल्लभ - तर्कार्णव - पण्डितरत्न - अभिनवदेशिक

तिरुमलैनल्लान् चक्रवर्ति - उत्तमूर वात्स्य श्रीवीरराघवाचार्यस्वामिनां

श्रीमुखपत्रिका

12 - 3 - 1978

25, नाथमुनिवीथी, ति. नगर्

मद्रास - 17.

श्रीमद्वेदमार्गप्रतिष्ठापनाचार्यैः, सम्यगध्यापित प्राच्यनव्यन्यायशास्त्र प्रौढग्रन्थजातः, "वेदान्त वावदूक" इति विख्यापितः विल्लिवलं नारायणाचार्यः, न केवलमत्र दक्षिणदेशे श्रीमधुरान्तके महाविद्यालये प्रधान-पदेस्थित्वा, किन्तु काश्यां सुप्रसिद्धराजकीय महाविद्याशालायामपि, (डाक्टर् सम्पूर्णानन्द विश्वविद्यालयेपि) महत्पदमधिष्ठाय न्यायवेदान्त प्रवचनेनापि प्रख्यातः, यत् प्रवचन इव प्रबन्धनिर्माणेऽपि प्रावीण्यं प्राप्य प्राज्ञान् परितोषयति, तदिदं नः परमं प्रमोदस्थानम् । असत्तोऽधीतस्य सर्वविद्याप्रदीपस्य सम्पूर्णस्य न्यायशास्त्रस्य सम्भाव्यमानं यादृशं फलप्रसावकत्वम्, तादृशं निखिलार्थविवेचनवैचक्षण्यं सत्तर्कपरिशीलन परिपाटीभाव्यमस्मिन् स्वाभाविकरोमुषीसम्पन्ने नारायणार्ये सम्यगालक्ष्यते ।

इदं नः प्रकृतम् । यदेषः श्रीमान्—श्रीमन्निगमान्तगुरोस्सर्वतन्त्रस्वतन्त्रस्यकृतिषु परमगहनं "परमतभङ्ग" नामकं प्रबन्धरत्नमीषादचूडमभीक्ष्णमालोड्य प्रत्यक्षरविवरणेन यथावत् देशिकाशयप्रकाशं तन्नाम्न्या व्याख्ययाऽ-ऽविरकार्षीत् ।

सर्वार्थसिद्धि न्यायसिद्धाञ्जनादि ग्रन्थानप्यतिशेते श्रीपरमतभङ्गग्रन्थः परेषांमतानुवादपरिशीलनादिपरि-पाट्याम् । वैदिकावैदिकमतप्रक्रियास्तत्तन्मतप्रवर्तकैः बहुषु ग्रन्थेषु विप्रकीर्णं प्रतिपादितास्सङ्कलय्य, तत्साधक-तर्काणामुत्तरोत्तरबलक्रमपरामर्शेन तत्तन्मतस्य सम्पूर्णामाकृतिं परिकल्प्य, शकलशस्तद्भञ्जनमेवैतद्ग्रन्थकृत्यम् । तत्रानूद्यमानग्रन्थवाक्यानि कुत्रत्यानि ? किन्तात्पर्यकाणि ? इति प्रायः पुरोवादग्रन्थपरिशीलनवैकल्ये दुरवधरमेव-भविष्यति । अतएवैतादृशस्य वैदुष्यस्य पर्याप्तस्य दुर्भिक्षेण पठनपाठनप्रणालीविरहात् एतद्ग्रन्थरक्षका यथा-वल्लेखितुमपारयन्तोमणिप्रवाळपयेऽस्मिन् प्रबन्धे संस्कृतं द्राविडञ्चान्यथयितवन्त इति स्फुटं भवति सावधानसेविनां-प्राज्ञानाम् ।

एष श्री नारायणार्यः सर्वंसह निशितधीसाहाय्येन सप्ताष्टसंवत्सरकृतपरिश्रमफलभूतं, करिणीवकलभं सकलवसुमतीशसम्भावनीयं व्याख्याप्रबन्धं प्रसूतवानस्ति। इदं चिराद्विज्ञाय—"बोद्धारो मत्सरग्रस्ताः प्रभवस्स्मयदूषिताः। अबोधोपहताश्चान्ये जीर्णमङ्गे सुभाषितम्" इतीदृशीदशाऽस्यमासमूदिति विमृष्टवतः, द्वित्रेभ्यो वत्सरेभ्यः प्राक् परमतभङ्गप्रवचनं यथावदान्तं विहितवतः, बहूनां छात्राणामपेक्षामनुरुध्य द्रमिडभाषया तव्द्याख्याने प्रवृत्तस्य मे "—एतदीयसंस्कृतव्याख्याग्रन्थमवलोक्य" तन्मुद्रणे एष प्रेरणीय इति मतिरुदभूत्। एतदीयस्य संस्कृतमयस्य सिद्धस्य, मदीयस्य च द्राविडमयस्यनिर्मीयमाणस्य मुद्रणे समुच्चयोऽपि प्रथमं चिन्तापदमध्यास्त।

अथापि—एतदीयस्य व्याख्यानस्यमध्ये/ कियानपि भागः प्रागेव मुद्रितप्रकाशित आसीदिति विज्ञाय, तदैकरूप्यरक्षणाय पृथगेवैतन्मुद्रणं मया प्रारम्भि। मुद्रणावसरे च मया—एतदादृतं परमतग्रन्थानां साक्षादवलोकनेन यथावदनुवादप्रकारं, वाक्यानामवतरणवितरणपदकृत्यपरिशीलनादि चाध्यक्षितवता महान् प्रमोदोऽन्वभावि। श्रीदेशिकचरणानुगृहीतग्रन्थान्तरसंवादविधानं, एतदनुसारेण तत्रतत्रवाक्यार्थयाथात्म्यज्ञापनञ्चऽऽस्थामत्रावर्धयत्।

परन्तु व्याख्याया अस्या अतिविस्तृततया, मुद्रणौपयिकद्रविणसम्पत्त्यभावेन, साक्षान्मुद्रणसमयविधेयशोधनादिनिर्वहणविरोधिवार्धकेन च किञ्चिद्दूरं मुद्रणे जातेऽपि, पूर्णमुद्रणाय समयान्तरं प्रतीक्षणीयमासीत्। एवमपि वर्षिष्ठेनमयोपक्रान्तद्रविडव्याख्यायाः पूर्तिं त्वरया चिकीर्षता द्रागेव तन्निर्माणमुद्रणादिकमन्ववर्त्यत। तदेवमाचार्यानुग्रहेण द्राविडव्याख्यासहितः परमतभङ्गः साम्प्रतमेकमासाभ्यन्तरे प्रकाशं प्राप्स्यतीति विस्रम्भोऽस्ति।

एतस्मिन्नवसरे सोऽयंश्रीनारायणार्यः, स्वकीयसंस्कृतव्याख्यानमप्यन्यत्रमुद्रयन्, तत्र कतिपयाधिकारभागं प्राकाश्यं प्रापयतीति भृशं प्रमोदे।

एतव्द्याख्यानार्थं परिशीलनीयानां स्वपरमतग्रन्थानां यत्र सौलभ्यम्, तत्र तादृशकौशाल्यसमीपे त्रिंशतेर्वत्सरेभ्यः प्राक् खिन्नवतोऽपि सम्प्रतिव्याख्यानावसरे तेषामलाभात् यथास्मृति सर्वजनव्युत्पादनौपयिकया संक्षिप्तविशदया सरण्या पूर्णग्रन्थ प्रकाशः क्रियते।

तदिदं यथावद्गुणगाऽर्थेनदीयं बहुग्रन्थानुवादपूर्वकनयाकृतमशेषपदपदार्थविशोधकमतिविपुलं संस्कृतव्याख्यानपि सादरमवलोकयन्तु सन्त इति विज्ञापयन् शीघ्रमेव श्रीनिगमान्तदेशिकरूपेण, स्वस्वरूपेण च स्थितः श्री वेङ्कटेशः, एतदीयस्य ग्रन्थस्य सम्पूर्णं प्रकाशनमप्यनुगृह्णातु इत्यभ्यर्थये।

परमतभङ्गव्याख्या तनुते या देशिकाशयंविशदम्।
नारायणार्यरचिता प्राकाश्यं शीघ्रमेतु सा पूर्णा॥

इत्थं—उत्तमूर्—
वात्स्य–श्री वीरराघवाचार्यः॥

ஸ்ரீ:

(ஸ்ரீ உ. வே. உத்தமூர் ஸ்வாமி ஸ்ரீமுகத்தின் மொழிபெயர்ப்பு)

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யராய், கடினமான பழைய புதிய ந்யாய சாஸ்திர க்ரந்தங்களைக் கற்பித்துத்தேர்ந்தவராய், "வேதாந்த வாவதூக" (வேதாந்த சாஸ்த்ரத்தை விரித்துரைக்கவல்லவர்.) என்ற சிறப்புப்பெயர் பெற்றவராய், இருக்கும் இந்த வில்லிவலம் நாராயணாசார்யவர்யரை, ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத மஹாவித்யா சாலையில், ப்ரதான உபதேசகர் ஸ்தானத்திலிருந்தபடியால் இந்த தென்னாடு மட்டும்தான் அறியும் என்பதல்லாமல், வடநாடும்; ஸ்ரீ காசீக்ஷேத்திரத்தில் ராஜகீயஸம்ஸ்க்ருத விச்வ வித்யாலயத்தில் (டாக்டர் ஸம்பூர்ணனந்தா வடமொழிப் பல்கலைக்கழகத்தில்) உயர்ந்த ஸ்தாநத்தில் வேதாந்த வித்யாப்ரவசநம் செய்தபடியால் நன்கறியும். இவர் இவ்விதமே, ப்ரபந்த நிர்மாணத்திலேயும் நிபுணர். இதைக்கண்டு பண்டித உலகமே பரிதோஷ—மடைகிறது. இதனால் நாமும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். ஸர்வவித்யா ப்ரதீபமான பூர்ணமான ந்யாய சாஸ்த்ரத்தை எம்மிடமிருந்து காலத்தில் அத்யயனம்செய்து, அதன் பயனாய் கருதப்படுகிற ஸமீசீநயுக்தி வாதங்களால் பிறக்கும் எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும் திறமை, இயற்கையிலேயே புத்திசாலியான இவரிடம் எளிதில் குடிபுகுந்துள்ளது.

நிற்க—இவர் இப்போது—ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் அன்று அருளிச்செய்த க்ரந்தங்களில்—மிகவும் கடினமாகிய "பரமதபங்கம்" என்னும்—க்ரந்தரத்நத்தை—அடி, நடு, முடிவுகளில் முழுதும் ஆழ்ந்து ஸேவித்து, ஒரெழுத்தும் பிழையின்றி விரித்து, உள்ளபடி தேசிகோத்தமனின் திருவுள்ளத்தை தனது உரையில் உரைத்துள்ளார்.

பிறருடைய பக்ஷங்களைப் பகுத்துக்காட்டும் விஷயத்தில், பரமதபங்கத்திற்கு—ஸர்வார்த்தஸித்தி ந்யாயஸித்தாஞ்ஜனாதிகளான மற்றைய தேசிகக்ரந்தங்களும் ஈடாகா. வைதிகம், அவைதிகம் என்ற நாநாவிதங்களான மதப்ரக்ரியைகளை அவரவர் தமது மத நூற்களில் காட்டியுள்ளார்கள். பரந்து இறைந்துகிடக்கும் அவற்றை ஒருங்குசேரத் திரட்டி, அவற்றுக்கான யுக்திகளை மேன்மேலென ஆராய்ந்து, அவைகளைக் கண்முன்னே நிறுத்திக்கடைசியில் பங்கப்படுத்துவது, பரமதபங்கத்தின் நோக்கமாகும். பரமதபங்க க்ரந்தத்தில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் ச்லோகங்கள், வாக்யங்கள் முதலியன—எவ்விடத்தியவைகள்? என்ன கருத்துடையவைகள்? என்பன போன்றவை நன்கு விளங்காவிடில், பரமதபங்கத்தின் முன்சொன்ன நோக்கம் நிறைவேறாது.

ஆகவேதான்—முக்கியமான இவ்வித பரமதபரிசய, புத்தி சக்த்யாதிகள் எங்கும் தேட்டமாகி (அரிதாகி) விட்டதால், அந்யயா அத்யாப காதிகளின் வழியிலிருந்து விலகி நிற்கும் இந்த க்ரந்தத்தை மூலமாத்ரம் அச்சிட்ட சிலரும் மணிப்ரவாளபாஷாமயமான இதில் வரும் தமிழ் ஸம்ஸ்க்ருத பதவாக்யாதிகளைப் புரிந்துகொள்ளாமல் தவறாகவே பதிப்பித்துள்ளார்கள்—என்னு மிது—இதை ஆழ்ந்து ஸேவிக்குங்கால் சிறந்த பண்டிதர்களுக்கு ஸ்பஷ்டமாக விளங்காமற்போகாது.

இந் நிலையில்தான், இந்த நாராயணாசார்யர் இந் நூலுக்கு, எதையும் தாங்கும் தன் புத்தி சக்தியைக்கொண்டு, ஏழெட்டு வருஷங்களாக வருந்தி உழைத்து, வேழம் அழகிய குட்டி ஒன்றை ஈன்றதென, ஸகல "வஸுமதீசர்களும் கொண்டாடும்படியான வ்யாக்யானத்தை வெளியிட்டார். (இங்கு—வஸுமதீசர்—என்றது—சிலேடையிலே மன்னர்—பணமும் புத்தியும் படைத்தவர் என்று இரு பொருள் தரும்) மன்னர் யானைவாங்குவர். பணமும் புத்தியும் படைத்தவர் இந் நூலை வாங்குவர் என்றபடி.

இதை நெடுநாளாக அறிந்திருந்த எமக்கு—ஓர் எண்ணம் உதித்தது. பண்டித உலகில் பழமொழியொன்றுண்டு. "ஒரு அறிவாளி, மற்றொரு அறிவாளியைப்பொறான். பணமுள்ளவனுக்குத் தன் பணப்பெருமையேபோதும். மற்ற மூன்றும் தரப்பினர்—பணமும் பாண்டித்யமும் அற்று பதார்த்தகோடியிலேயே சேராதவர். ஆக நான்கற்ற நல்லதை யாருக்குச் சொல்லுவேன்? மங்கி அது என்னிடமே அழிந்தது." என்று. அந்த நிலை இவருடைய இந்த க்ரந்தத்துக்கு வரவேண்டாமென்று யோசித்துப்பார்த்தோம். யாம், எம்மிடம் வரும் சிஷ்யர்களுக்கு 2, 3 வருஷங்களாய் நல்லமுறையில் முழுவதும் பரமதபங்கம் ப்ரவசநம் செய்திருந்தபடியால், இதன் கஷ்டமறிந்து, பல பேருடைய கோரிக்கையையும் ஒட்டி, தமிழில் இதற்கு ஓர் உரை எழுதத்துவங்கினோம். அப்போது இவருடைய ஸம்ஸ்க்ருதவ்யாக்யானத்தையும் பார்த்து அதையும் வெளியிட இவரைத்தூண்டவேணும் என்று எமக்குத்தோன்றியது.

பிறகு—அச்சிட ஸித்தமாக இருக்கும் இவருடைய ஸம்க்ருதக்ருதியையும், அவ்வப்போது இயற்றப்பட்டுக்கொண்டே வரும் எம்முடைய தமிழ் உரையையும் சேர்த்து ஒரே புத்தகமாக அச்சிடலாமென்றும் முதலில் எண்ணினோம். ஆனால்—அவ்வாறு செய்ய இயலவில்லை. ஏனெனில்—இவருடைய வ்யாக்யாநமும் மூலமும், முன்பே ஓரிடத்தில் சிற்—சில பகுதிகளாக வெளியிடப்பட்டுளது. ஆகையால்—இப்போதும் தனித்தே அச்சிடுவது நல்லதெனத்துணிந்து யாமே அவ்வாறு அதை அச்சிட ஆரம்பித்தோம். அச்சிடும் வேளைகளில் இவர்—தன் உரையில்—பிறர் மத நூற்களிலிருந்து நேருக்குநேராக ப்ரமாணங்களை உதாஹரித்துக்காட்டி, உள்ளபடி விளக்கியிருப்பதையும், மூலவாக்கியம் ஒவ்வொன்றையும அவதாரிபித்து, பதங்களின் பயனைக்கூறி, வாக்யார்த்தவிவரணம், விசாரம் முதலியன செய்திருப்பதையும் கண்ட, யாம் அளவற்ற ஆனந்தம் கொண்டோம். ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த மற்ற க்ரந்தங்களை நடு நடுவே உதாஹரித்துக்காட்டுவதும், தேவையான இடங்களில் இப்பரமதபங்கத்துக்குச் சேர அவ்வவற்றின் உண்மையைவிளக்குவதும் எமக்கு இதில் மேலும் ஆவலைத்தூண்டின.

இவ்வித மிருப்பினும்—இவருடைய நூல் நீண்டிருக்கிறபடியாலும், அவ்வளவையும் அச்சிட அந்த ஸமயத்தில் அர்த்தஸௌகர்யமில்லாமையாலும், எமக்கு அச்சிடும்போது பிழைதிருத்தல் முதலியன செய்யமுடியாதபடி முதுமை தடுத்ததாலும், 3 அதிகாரம்வரை அச்சிட்டதோடு நிறுத்தி, வேறு ஸமயம் எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தோம். ஆயினும் இவ்வயதிலும் யாம் ஆரம்பித்த தமிழ் உரையை சீக்கிரம் முடிக்கக்கருதி அதை சோதிதது அச்சிட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். இவ்விதம் ஆசார்யாநுக்ரஹத்தாலே எம்முடைய

தமிழ் உரையோடு—பரமதபங்கம்—இப்போது ஒரு மாதத்தில் வெளிபிடப்படலாம் என்று நம்புகிறோம். இவ்விதமே—இவரும்—தன்னுடைய ஸம்ஸ்க்ருத வ்யாக்யானத்தின் முதல் பாகத்தை வேறு இடத்தில் அச்சிட்டு சீக்கிரமே வெளிபிடப்போகிறார் என்று அறிந்து மிகவும் மகிழ்கிறோம்.

பரமபதங்கத்தை வ்யானிக்கத் தேவையான ஸ்வபரமதக்ரந்தங்கள் நிறைந்த புஸ்தக சாலைக்குச் சமீபமாகவே சுமார் 20 வருஷங்களுக்கு முன்பு இருந்த எமக்கு—இப்போது, அந்த வசதியில்லாமையாலே, அவற்றை முடிந்தவரை நினைவிற்கொணர்ந்து, எல்லோரும் அறியும் வண்ணம், விளக்கமும் சுருக்கமும் கொண்ட தமிழ் மொழியாலே வ்யாக்யானித்து பூர்ண க்ரந்தமுத்ரணம் இப்போது செய்கிறோம்.

ஆக இதைக் கருத்தில்கொண்ட மஹான்கள்—பல பல நூற்களை மேற்கோள் காட்டி, உள்ள பதவாக்கியங்களுக்கெல்லாம் பொருள் கருத்து முதலியன கூறி, விரிந்து செல்லும் இவருடைய வ்யாக்யானத்தையும் வரவேற்று உகப்பர் என்று நம்புகிறோம்.

திருவேங்கடமுடையான்—தானும், ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுமாய்—ஒருருவே ஈருருவாய் என்றபடி இருந்து, இவருடைய வ்யாக்யான க்ரந்தத்தையும் பரிபூர்ணமாய் ப்ரகாசம் செய்ய சீக்கிரமே திருவுள்ளம் கொள்ளவேண்டுகிறோம்.

(ச்லோ) परमतभङ्गव्याख्या, तनुते, या देशिकाशयं विशदम् ।
नारायणार्यरचिता, प्राकाश्यं शीघ्रमेतु सा पूर्णा ॥

இப்படிக்கு,
உத்தமூர்-ஸ்ரீ-வாத்ஸ்ய,
வீரராகவாசாரியர்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

विदितमेवेदं त्रिश्चिषां विपश्चिदपश्चिमानां श्रीमन्निगमान्तमहादेशिकस्य ग्रन्थाः शास्त्रकाव्यव्याख्यानरहस्यस्तोत्रादिरूपेण विविधा विशिष्टाद्वैतसिद्धान्तान् प्रकाशयन्तस्तेषामेव श्रुतिस्मृतीतिहासपुराणसम्यङ्न्यायोपपन्नतामितरेषां तद्विपरीततां च बोधयन्तो जरीजृम्भन्त इति । तत्र परमतभङ्गाख्यो रहस्यग्रन्थोऽत्यन्तं गम्भीरो विलसति, यस्य समर्थतरा अप्यस्मत्संप्रदायविद्वांसः केवलप्रवचनमात्रपराः सन्तः कात्स्न्येंन व्याख्यानकरणाय तावत्पर्यन्तं न केचित् प्रावर्तिषत । अस्मत्संप्रदायस्य भागधेयवशात् इदानींतनानां पश्चात्तनानां च जिज्ञासूनामुपकृतये यतमानाः ; जगद्विख्यातकीर्तिभिः श्रीमदहोबिलमठीयद्वाचत्वारिंशास्थानमलंकृतवद्भिः श्रीमद्वेदमार्गेत्यादि ....श्रीवणशठकोपश्रीश्रीरङ्गशठकोपयतीन्द्रमहादेशिकैरनुगृहीतवेदान्तवावदूकविरुदास्तथैव परकालमठाधिपतिभिः श्रीमद्वेदमार्गेत्यादि..............अभिनवरङ्गनाथब्रह्मतन्त्रपरकालयतीन्द्रैश्च दत्तविरुदाः श्रीमन्तोनारायणाचार्या एतत्परमतभङ्गं व्याचिकीर्षवः मतान्तरग्रन्थान् बहून् परामृश्य तत्सारं सम्यग् विदित्वातिसरलया शैल्या नातिसंक्षेपविस्तरं व्याख्यानं विधाय श्रीदेशिकचरणानामाशयं सम्यगाविष्कृत्य महान्तं संप्रदायोपकारं व्यरचन्निति महदिदं प्रमोदस्थानम् । अत्र वैभाषिकभङ्गाधिकारव्याख्यायां बौद्धमतस्य विषयं शास्त्रदीपिकायां जैनग्रन्थादौ चानूद्यमानं तत्र तत्र प्रकाश्य श्रीदेशिकाशयविवरणं क्रियमाणमत्यन्तं पण्डितानां मनोरञ्जयतीति नैतदपह्नोतुं शक्यम् । किं च संक्षिप्तया द्राविडव्याख्यया मेलितमिदं संस्कृतज्ञानविधुरजिज्ञासुलोकस्याप्युपकरोति ॥

वेदान्तवावदूकैः श्रीमन्नारायणार्यैर्कै रचिता ।
परमतभङ्गव्याख्या पण्डितलोकाभिरञ्जनी जयति ॥

इत्थम्

*मेल्पाक्कं श्री नरसिंहाचार्यः

पाण्डिच्चेरीस्थप्रेञ्चभारतीयकलाविमर्शालयविमर्शकः

6 - 5 - 1978

* பாண்டிச்சேரியில் - ப்ரஞ்சு - இந்திய - கலாசார - ஆராய்ச்சிக் கழகத்திலே பணி புரியுமிந்தஸ்வாமி - இவ்வுரையாசிரியரின் ஆருயிர் நண்பர், மஹாவையாகரணர் சிறந்த தர்க சாஸ்த்ர நிபுணர். அந்தஸ்வாமி அருளிய அபிநந்தபத்ரமிது.

॥ श्रीमते श्री लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

பதிப்பாளரின் பணிவுரை

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த "ஸ்ரீ பரமதபங்கம்" என்னும் மஹாக்ரந்தத்தின் மஹிமையை அறிந்துள்ளவர் வெகுசிலரே.

ஸ்ரீ. உ. வே. வேதாந்தவாவதூக வில்லிவலம் நாராயணுசார்யஸ்வாமி இந்த மஹா க்ரந்தத்திற்கு-வடமொழியில் (ஸம்ஸ்க்ருதத்தில்) விரிவான வ்யாக்யானம் ஒன்றை மிகச் சிறந்த முறையில் பல வருஷங்கள் வருந்தி-உழைத்து-இயற்றியுள்ளார்.

நம் ஸ்வாமியினுடைய க்ஞானம்-அனுஷ்டானம் சிறந்த ஆத்மகுணம் இவற்றை உலகமே அறியும். மஹாசார்யர்களுடைய பரிபூர்ணனுக்ரஹத்தைப் பெற்றவர். சொல்லிலும் எழுத்திலும் உயர்ந்த நடையையே உபயோகிக்கும் உத்தமர் இந்த ஸ்வாமி.

இத்தகைய சிறப்பியல்புகள் பல பல இருப்பினும் நம் ஸ்வாமி தன்னை வெளியுலகுக்கு காட்டிக்கொள்ளாமலேயே ஆடம்பரமின்றி-எளிமையுடனேயே இருந்து விட்டார். ஆயினும் உலகம்-இந்த உத்தமரையும்-இந்த ஸ்வாமியின் உத்தம குணங்களையும் நன்கு அறிந்திருந்தது.

பற்றற்றபான்மையுடனேயே எழுந்தருளியிருந்த இந்த ஸ்வாமிக்கும் ஓர் பற்று இருந்தது. அதாவது-அதிகப்ரசாரமின்றி இருக்கும் இந்த ஸ்ரீபரமதபங்கத்தைத் தாம் எழுதிய வ்யாக்யானத்துடன் அச்சிட்டு, அண்டிக்கேட்கும் அநேக ஸச்சிஷ்யர்களுக்கு-எடுத்து உபதேசிக்க வேண்டும் என்ற ஆவலேயாகும். நம் ஸ்வாமியின் இந்த மனோரதம்-பூர்த்தி பெருமலேயே போய்விட்டது. இதை நினைக்கும்போது நெஞ்சம் குமுறுகிறது. இந்த வ்யாக்யானத்துடன் கூடிய ஸ்ரீபரமபங்கத்தின் ஒரு பகுதி பூர்த்தி பெறும் தருவாயில் இருக்கும்போதே நம்முடை நம்பெருமான் நம் ஸ்வாமியை அழைத்துக்கொண்டுவிட்டான். நம் ஸ்வாமியும் தாம் திருநாடு செல்ல இருப்பதைப் பலவிதங்களில் பலமுறை திட்டமிட்டு அருகிருந்தார்க்கு அப்பொழுதே அவ்வப்பொழுது அறிவித்தவண்ணமிருந்தார். "வைத்யத்திற்குச் செய்யும் செலவு வீணே. நான் விரைவிலேயே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவடிகளை அடையப் போகிறேன். எனக்கு வைத்யம் வேண்டாம்", என்றெல்லாம் ஸாதிப்பார்.

"இந்தக்ரந்தம் அச்சிட்டு வெளிவரும் வரை நான் காத்திருக்க முடியாது. அதற்கு முன்னமேயே திருநாடு சென்று விடுவேன். ஒருவன் ஜீவித காலத்தில் செல்வாக்குடன் இருந்தால்தான் அவனைப் பலரும் மதிப்பார்கள். அவனே சக்தியின்றி படுக்கையில் விழுந்து விட்டால் எவரும் அவனை மதிக்கமாட்டார்கள். அவன் மறைந்த பிறகு அவனை ஒருவரும் மனத்திலும் கொள்ளமாட்டார்கள்; இத்தகைய உலக இயல்பின்படி-நான் மரித்தால் நான் எழுதிய க்ரந்தம் வெளிவருவதைப்பற்றி சொல்ல வேண்டுவது என்ன இருக்கிறது! கேட்பாரற்று கிடக்கும் நிலைதான் இந்த க்ரந்தத்திற்கு ஏற்படப்போகிறது என்பதையும் நடுநடுவே ஸாதிப்பதுண்டு.

ஆனால் நாங்கள் யாவருமே ஸ்வாமி ஸாதித்ததை மனத்தில் கொள்ளவில்லை. "அசக்தியினால் இப்படி ஸாதித்தாகிறது திருமேனிகுணம் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டுகள் பாங்காக எழுந்தருளியாயிருக்கப் போகிறார்" என்றே நினைத்திருந்தோம். இப்பொழுது அன்று ஸாதித்த வார்த்தைகளின் உண்மையை நினைத்து நினைத்து உள்ளம் உருகுகிறோம்.

எல்லோருடைய மனோரதத்தையும் ஒரே அடியில் அழித்து விட்டான் எம்பெருமான். நாம் என்ன செய்வது?

இனிச்செய்ய வேண்டுவது ஈதே! இந்த முதல் பாகம் ஒருவாறு தற்போது வெளியாகிறது. ஸ்வாமி ஸந்நிதியிலே சாஸ்த்ரங்கள் பயின்று ஸமீசீன ஞானம் பெற்ற நாங்கள் பலரிருக்க ஒருவரும் ஸ்வாமிக்கு அருகிலிருந்து-இந்தக் க்ரந்தசோதனம் முதலியவற்றில் உதவப்பெற்றிலோம். இரண்டு வருஷ காலமாகவே நம் ஸ்வாமி திருமேனி நலம் குன்றி விட்டார். ஹ்ருதயமும் மிக துர்பலமாய் விட்டது. இந்த நிலையிலும் தாமே சோதனம் முதலான பணிகளைச் செய்து வந்தார். ஆகவே பல குறைகள் நேர்ந்து விட்டன.

ஆனாலும் ஆஸ்திகர் அனைவரும் இந்த க்ரந்தத்தை ஆதரித்து-வாங்கினால்-இதனால் கிடைக்கும் பணத்தைக்கொண்டு மற்றுமோர் பகுதியை வெளியிடலாம். முதலில் தோன்றியது நம் ஸ்வாமியின் வ்யாக்யானமே. பணவசதியில்லாமையால் வெளிவருவதில் பின்னடைந்து விட்டது. ஆஸ்திகப்ரபுக்கள் செய்த பேருதவியால்தான் இது வெளி வருகிறது. வெளிவந்தபிறகும் இந்த ஸ்ரீகோசத்தை யாவரும் வாங்கி ஆதரித்தால் அது ஸம்ப்ரதாயத்திற்குச்செய்யும் பேருபகாரமாகும். விலையையோ; ஸ்ரீகோசத்தின் அமைப்பையோ கருதாமல் உதவ வேண்டும். அன்பர்களின் உதவி சிறந்த முறையில் கிடைத்தால் அடுத்த பாகத்தைச் சிறந்த முறையில் அச்சிடலாம். எல்லாவற்றிற்கும் பணம் தானேப்ரதானகாரணம்.

நம் ஸ்வாமி எழுந்தருளியிருந்து இதை வெளியிட அடியோம் கண்டு களிக்க வேண்டியிருக்க—அந்த ஸ்வாமி பரமபதித்த பிறகு அடியோமே அந்தப்பொறுப்பை ஏற்க வேண்டி நேர்ந்துவிட்டது.

பரமோதாரராய்-ஜகத்ப்ரஸித்தராய் தற்போது 44வது ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அழகிய சிங்கருடைய திவ்ய நியமநத்தினால் இந்தக்ரந்தம் நம் ஸ்வாமியினுடைய வேதாந்தவித்யா குருவரரான ஸ்ரீமத் இஞ்சிமேட்டு அழகிய சிங்கரின் நூற்றாண்டு விழாவில் வெளிவருவது-நம் ஸ்வாமியின் திருவுள்ளத்திற்கு மிக்க உவப்பைத்தரும்.


நம் ஸ்வாமி-தன் படத்தை இந்தக்ரந்தத்தில் சேர்க்க வேண்டாம் என்று நிர்ப்பந்தித்து நியமித்திருந்தார். தற்போது அடியோம் ஸ்வாமியின் இந்த நியமனத்தை மட்டும் மீறியுள்ளோம். இனி நம் ஸ்வாமியை இந்த லீலா விபூதியில் ஸேவிக்க முடியாதாகையால் பின்னோர்களும் ஸ்வாமியின் திருமேனிஸேவையைப் பெற வேண்டும் என்று ஸ்வாமியின் திருவுருவப்படத்தைச் சேர்த்துள்ளோம்.

"பதிப்பாளரின் பணிவுரை" என்ற இந்த அம்சம் ஒன்றுதான் இதில் நாங்கள் எழுதியது. மற்றவையனைத்தும் ஸ்வாமி தன் திருக்கையாலேயே எழுதி அச்சகத்திற்கு அனுப்பி விட்டிருந்தார். ஏன்! அடுத்த பகுதியையும் அச்சிடுவதற்கேற்ப அழகிய தம் திருஎழுத்துக்கள் கொண்டே முழுவதும் எழுதி வைத்துள்ளார். அடுத்த பகுதி அச்சாக சுமார் 40,000 ரூபாய்கள் தேவைபடுகின்றன. ஆஸ்திகர்களின் ஆதரவு திரண்டால் எதையும் எளிதில் நிறைவேற்றி விடலாம். ஆகவே கடைசி காலத்தில் ஸ்வாமி வருந்தி ஸாதித்த வார்த்தைகளைப் பொய்யாக்கி ஸ்வாமியின் மனோரதத்தை மெய்யாக்க வேண்டும் என்று மஹான்களைப்பணிந்து வேண்டிக்கொள்கிறோம்.

நம் ஸ்வாமி சொல்லிலும்-எழுத்திலும் "ஸ்ரீ அஹோபலமடம்" என்றே கையாள்வது வழக்கம். ஆகவே ஸ்வாமியின் திருவுள்ளப்படியே அச்சிடப்பட்டுள்ளது.

॥ சுபம் ॥

ஸ்ரீ:



உரையாசிரியர் : ஸ்ரீ. உ. வே. வேதாந்தவாவதூக, வில்லிவலம்
வாத்ஸ்ய, நாராயணாசார்ய ஸ்வாமி.

श्रीः ॥

श्रीमते लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ॥

श्रीमन्तं परपक्ष भङ्गविषयं ग्रन्थं सुगूढाशयं
श्रुत्यन्तार्यविनिर्मितं स्वयमिहाप्यालक्ष्य सूक्ष्मं स्फुटम् ॥
व्याख्यायाद्य कथञ्चिदाप्त जनसम्प्रीत्यै तदीयादरात्
संमुद्र्य प्रकटीकरोमि नृहरिः मालोलं आमोदताम् ॥ 1 ॥
एतल्लेखनमुद्रणादिविषये यावांश्च यश्चाप्यभूत्
तावन्तश्च परिश्रमं तमपि मे सर्वो जानो वेत्त्विति ॥
भाषायामिह भूमिकापरिचयव्याजेन सङ्क्षेपतः
तुष्टिं तद्विरहश्च सम्प्रति वहन् वाचा कथञ्चित् ब्रुवे ॥ 2 ॥

"உரையாசிரியரின் முன்னுரை"

சுமார் 15 வருஷங்களுக்கு முன் அடியேன் ஆரம்பித்த ஓர் நல்லகார்யத்தின் முதற் பகுதி—இப்போது மங்களமாக பூர்த்தியடைகிறது.

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையானுகிய ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த "ஸ்ரீ பரமதபங்கம்" என்னும் மஹாக்ரந்தத்திற்கு அடியேன் வடமொழியில் விளக்க உரையும் தமிழில் சுருக்க உரையும் எழுதி உள்ளேன். அதில் முதல் பாகம் வெளியிடப் படுகிறது இப்பொழுது. ஆம்! இது ஓர் ஒப்பற்ற மஹா க்ரந்தமேயாகும். இதில் அதிகாரம் தொறும் ஆதி அந்தங்களில் தமிழ்ப் பாசுரங்களே அருளிச்செய்யப்பட்டிருப்பதாலும், மணிப்ரவாள பாஷையாய் நடு நடுவே தமிழ் வாக்கியங்கள் விரவிவருவதாலும், சில்லரை ரஹஸ்யங்கள் என்னும் வகையில் இதையும் சேர்த்தனர்போலும் பூர்வர்கள். ஆனால் உண்மையில் ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ந்யாயஸித்தாஞ்ஜநம், ஸர்வார்த்தஸித்தி" முதலிய கடின க்ரந்தங்களைப்போன்றது—ஏன்—அவற்றை விடவும் மிக மேம்பட்டது இந்த க்ரந்தம் என்பது தான் சரியாகும். இந்தக்ரந்தத்தை, மேல்நோக்காகப் புரட்டிப்பார்த்தாலேயே நூற்புலமையுள்ளவர்க்குப் புரியுமிதன் பெருமை.

சுமார் பதினைந்து பிறமதங்களில்—ஏதோ எதிர்ப்பட்ட சில விஷயங்களை மட்டும் கண்டித்தார்--எனபதோடு நில்லாமல்—இந்தக்ரந்தத்தில் இவரே அவற்றை அணுகி—அணுவணுவாக அலசி ஆராய்ந்து நமது மனக்கண்ணெதிரே கொண்டுவந்து நிறுத்தி தூரத்தே தள்ளுகிறார் என்றால், இதின் கடினத்தன்மையும், ஆழமும், அகலமும் எம்மால் சொல்லப்போமோ?

அதனால்தான்—ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுடைய மற்றைய க்ரந்தங்கள்போலே இது படந பாடநங்களிலே அவ்வளவு ப்ரசாரமடையவில்லைபோலும். ஸ்வாமியினுடைய மற்றைய க்ருதிகள் (க்ரந்தங்கள்—பெண்கள் என்றும் தொனிக்கும்.) பிள்ளை—பேரன்களைப் பெற்று விட்ட பிறகும் (உரை—அதற்கும் உரை என்றும் தொனிக்கும்.) இந்த பரமதபங்கக்ருதி

மட்டும், பிள்ளையே (உரையே) இல்லாமல் இந்நாள்வரை தனித்து மலடாகவே நின்று விட்டது. ஆம்! இதற்குப்பெரியோர்கள் யாரும் உரையிடவில்லை. இதைப் பெரியோர்கள் எடுத்து ஸேவிக்கவும்மில்லையோ என்று கூடக் கூறலாம். ஆனால் அப்படிக் கூறுவதற்கு அடியேன் நா கூசுகிறது.

ஓர் உதாஹரணம் பாருங்கள். சிறிது கோடிட்டுக்காட்டுகிறேன். ஸ்வாமி தேசிகன் ஒரு பௌத்தமதக்கொள்கையில் ஒரு விஷயத்தை ந்யாயஸித்தாஞ்ஜன க்ரந்தத்தில் சிறிது சுருக்கமாகவும், பரமதபங்கத்தில் விளக்கமாகவும் ஒரே திருவுள்ளத்தில் அருளியுள்ளார். ஆனால் ந்யாயஸித்தாஞ்ஜன க்ரந்தத்திற்கு உரையிட்ட ஸர்வக்ஞப்ராயர்களான ஆசிரியர்கள் முன் சொன்ன கொள்கையின் விஷயத்தில்பரமதபங்க க்ரந்தத்திற்கு முரணாகவே, தேசிகன் திருவுள்ளத்தைக் கூறிப்போந்தார்கள். இந்தக்ரந்தம் அக்காலத்தில் அவ்வளவாக ப்ரசாரத்தில் இல்லை என்பதையே இது காட்டுகிறதென்று கூறலாமோ என நினைக்கிறேன். தவறானால்தாஸனை மன்னிக்கவும். மேலே அடியேனுடைய உரையில் இவ்விவரம் காணலாம். இப்படி பல பல உண்டு. ஆக, மூலத்தின் முரடான தன்மையைப் பார்த்து, பிறமதங்களின் புழக்கத்தையும் கணிசித்து, மணிப்ரவாள வசந நடை வழக்கொழிந்தமையால்—வடநாட்டவரும் பார்க்கலாம்படி ஸௌகர்யார்த்தமாக சுத்த ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே விரிவாக உரை எழுத அடியேன் ஆரம்பித்தேன். தென்னாட்டவரைக் கருதி தெளிந்த தமிழிலும் திட்டமாக மொழிபெயர்த்துள்ளேன்.

நிற்க—மூலத்தின் மஹிமையைச் சிறிது பார்த்தோம். அடியேன் உரையின் பெருமையைச் சொல்லிக்கொள்ள யான் விரும்பவில்லை. நீங்களே பாருங்கள். இனி அடியேன் உரையிட நேர்ந்த ஸந்தர்ப்பத்தை மட்டும் சிறிது விளக்குகிறேன்.

முன்னோர்கள் "அதீதம், அத்யாபிதம், ஆர்ஜிதம்யச:" (अधीतं-अध्यापितं-आर्जितं यशः) என்றார்கள். அதாவது, "நான் முதலில் கற்றேன். பிறகு பிறருக்குக் கற்பித்தேன். அடுத்து கீர்த்தியைத் தேடிக்கொண்டேன்." என்றவாறு, இதனால் படிப்பின் பயன் கூறப்பட்டதாகிறது. இங்கு கீர்த்தியைத்தேடிக்கொள்வதாவது—தாம் கற்றவை பற்றி நூல் எழுதலேயாகும். அப்போதுதான்—அது நீண்டகாலம் நின்று, இவன் மறைந்தபிறகும் இவனுடைய நினைவைத் தரும்; புகைப்படமெடுத்தல்போல. மணம் புரிந்ததற்குப்பயன் மக்களைப் பெறுவது. கற்றதின் பயன் க்ரந்தங்கள் எழுதுவது. இவ்வாறு க்ரந்தங்கள் எழுத அடியேனுக்குப் பலவித ஸந்தர்ப்பங்களை ஸர்வேச்வரன் சிரகாலமாகவே கொடுத்தருளினான்.

தம்முடைய ஜ்ஞாநாநுஷ்டான வைராக்யாத்ம குணாதிகள் அனைத்தாலும் அனைவரையும் விஞ்சிநிற்பவரும், பலபண்டித சிஷ்யபரிவ்ருதருமான ஸ்ரீமத் இஞ்சிமேட்டழகிய சிங்கர் முதலில் தம்மிடம் வேதாந்தாத்யயநம் செய்துவந்த அடியேன் பக்கல் கரைபுரண்ட கருணையாலே குளிர கடாக்ஷங்கள் செய்து பிறகு மதுராந்தகத்தில் ஸம்ஸ்க்ருத மஹா வித்யாலயத்தில் ப்ரதம பண்டிதராக அடியேனை நியமிக்க—அவ்வாறே அடியேனும் 25 ஆண்டுகள் ந்யாயகரந்த பாடம் சொல்லி வந்ததுநான் க்ரந்தம் இயற்ற முக்ய காரணமாய் அமைந்தது. ந்யாயமீமாம்ஸா வேதாந்தாந்தாதி நாநாசாஸ்த்ர க்ரந்த நிர்மாணசதுரராய், இப்போது சென்னையில் விளங்கி வரும் அபிநவதேசிக ஸ்ரீ உத்தமூர் ஸ்வாமி ஸந்நிதியில் அதிகரித்த ந்யாயசாஸ்த்ரத்திற்கு ஓர் ந்யாய்யமான உபயோகத்தை நம் வித்யாலயத்தில் ஸத்பாத்ரங்களிடையே செய்யும்போது கதாதரக்ரந்தங்களின் சைலியில் அடியேன் மனம் சென்று லயித்தது. கரடுமுரடான அந்த சாஸ்த்ர ப்ரமேயவிசாரங்களை அடியேன் இங்குக்

குறிப்பிடவில்லை. பின்னை? "த்ரிக்ரந்தி" என்று அவர்களே வழங்கும்—மணி—தீதிதி—
கதாதரீயவாக்யங்களின் உத்தரோத்தர வ்யாக்யான வைசத்யங்களை வ்யுத்பத்தியுடன்
படிக்கும்போது உண்டாகும் ஆனந்தத்தையே அடியேன் குறிப்பிட்டேன். அந்த நாளி
லிருந்தே அடியேன் மனதில் அது தொத்திக்கொண்டது. "வ்யாக்யானமென்றால், அப்படி
யன்றோ எழுதவேண்டும்" என்று ஓர் ஆசை பிறந்தது. அதற்குப் பிறகு—திருவேங்கட
முடையான் திருவடிவாரத்தில் மஹாமீமாம்ஸகராய், லௌகிகவைதிக வித்யாப்ரஸ்தானங்
களில், பஹுவித்தாய், விசதபாஷண விசக்ஷணராய், அஸ்மத்ஸம்ப்ரதாயத்தில் அபிஜாதராய்
எழுந்தருளியிருந்த ஒரு மஹான் நிர்ஹேதுக கடாக்ஷம் அடியேனிடம் செய்து ஒரு ஸமயம்—
ஒரு ப்ராசீன அத்வைத க்ரந்தத்தைக் கொடுத்து அதை விமர்சிக்கும்படியும், வாய்த்த
போதெல்லாம் வீணாகக் கழிக்காமல் ஏதாவது எழுதிவரும்படியும் பணித்தருளினர்.
அவ்விதமே செய்து காட்டி அவரை உகப்பித்தேன். அவற்றுள் இதுதான் என் கைபடைத்த
கன்னி நூலாகும். (முதல் க்ரந்தமாகும்.) பிறகு எழுதி—ருசி கண்டவடியேன் பல பல
எழுதியுள்ளேன். இந்த வழக்கம் இவ்விதம் வளர்ந்தது. ஆனால், இவை எல்லாம் ஒரு
சுதந்த்ரப்போக்குடைய க்ரந்தங்களாகையால்—இவை எழுதுவது சுலபம். முன்சொன்ன—
"த்ரிக்ரந்தியைப்" போல், மூலத்தையொட்டி, அதன் கருத்தோடு நம் கருத்தைச்
சேர்த்து, அதன் ஸூக்ஷ்மங்களை வெளியிட்டு, சுதந்த்ரமாயும் பரதந்த்ரமாயும் நின்று
வ்யாக்யானம்—(உரை)—இடுவதுதான் கடினம். இம்மாதிரியான ஒரு வாய்ப்பைத்
தேடிக்கொண்டிருந்த அடியேனுக்கு ஒரு பாக்ய விசேஷத்தாலே ஸ்ரீ பரமதபங்கம் மூலப்ரதி
கையில் கிடைத்தது. மனதில் ஸந்தோஷமும் ச்ரமமுமடைந்தேன். ஸ்ரீ ஸ்வாமி தேசிக
னுடைய க்ருதிகளில் இதொன்றே நிஸ்ஸந்ததியாய் நின்றுவிட்டது. பூர்வாசார்யர்கள்
யாருமிதை வியாக்யானிக்கவில்லை என்று முன்பே கூறினேன். அதிஸூக்ஷ்மமான தேவப்
பெருமாள் திருமேனிபோன்று, இது ஸ்பஷ்டமான—ஸ்தூலமான—ஓர் உரைக்கவசத்தை
எதிர்பார்த்து நின்றது. சொல்லாலும் பேச்சாலும் பெரும்பாலும் அபூர்வமான விஷயங்
களையே ஆதரித்துப்போகும். அடியேன் ஸ்வபாவத்துக்குச் சேர—வந்து வாய்த்த அதை
அப்போதே வ்யாக்யானிக்க ஆரம்பித்துவிட்டேன். சுமார் 1960ம் ஆண்டென்று
நினைக்கிறேன். முக்கியமாக இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஸ்ரீமத் இஞ்சிமேட்டு
அழகியசிங்கர் இதற்கு, பலருடைய ப்ரார்த்தனையின்மேல் உரை எழுத்திருவுள்ளம்.
கொண்டார். ஆயினும் ஸ்ரீ ஸந்நிதி கைங்கர்ய கோலாஹலத்தினால் இதற்கு அவகாசம்
இல்லையாயிற்றுபோலும். ஆளவந்தார் திருவுள்ளத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் நிறைவேற்றியது
போல, நெடுவாசியிருப்பினும், அடியேன் அம்மாதிரி செய்யமுயன்றேன். ஏதோ! ஒருவாறு
செய்தும் முடித்தேன்.

இரண்டு மூன்று ஆண்டுகள் உருண்டு ஓடியிருக்கலாம். ஸ்ரீ காஞ்சி தேவாதிராஜன்
ஸந்நிதி ஸ்ரீகார்யதுரந்தரரும், சாஸ்த்ரஸம்ப்ரதாயஜ்ஞானம் எல்லாம் சிறப்பாகக் கைவந்தும்
நீறுபூத்த நெருப்பே போல பகட்டிக்கொள்ளாதே பழகப் பழக இனிப்பவரும், ஆன
(ஐயா) ஸ்ரீ க்ருஷ்ணதாதாசாரிய ஸ்வாமி. செய்தருளிய பரந்தான—பரமதபங்கமணி
ப்ரவாளவ்யாக்கியானத்தின் அச்சிடாத கைப்ரதி ஒன்று அன்னாருடைய ப்ரியசிஷ்யராய்
ஆஸ்திகாக்ரேஸரராய் ஸம்ப்ரதாய ரஸிகராய், லௌகிகப்ரபுவர்யரான ஒரு சென்னைவாஸி
ஸ்வாமியாலே பரமக்ருபையுடன் அடியேனுக்குக் கொடுத்தனுப்பப்பட்டது. அது அடியே
னுடைய பெரும் பசிக்குச் சோறிட்டு ஸுகித்திருக்க பண்ணியதேயாயினும்—ஸ்ரீராம—
நள—ஸேது, நடு நடுவே மறைந்திருப்பதுபோல், பற்பல அதிகாரங்களில் அவ்வ்யாக்கியை

காணப்படவேயில்லை. கைசோர்ந்ததோ? செய்யப்படவேயில்லையோ? கிடைத்தவரையிலும் கூட பற்பல விடங்களில் அத்தோடு உள்ள கருத்துமாறுபாட்டை அடியேனது உரையில் விநயத்துடன் கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

இங்கொரு விஷயம் இது ஸம்பந்தமாகக் கூறுகிறேன். எனது உரையின் உபக்ரமத்திலேயே—"பரமத பங்கம் பூர்வாசார்யர்களாலே வ்யாக்கியானிக்கப்படாது அழுக்கடைந்த–ரத்நம் போல் சோபியாமே கிடக்கிறது. அதை அடியேன் முதன் முதலாக ஆராய்ந்து அழுக்குக்கழற்றித் தருகிறேன். கண்டா பரணமாக அணியுங்கள்" என்று கூறியுள்ளேன். இவர் உரை ஒன்று அடியேனுடைய நூலுக்கும் முன்னுடியே இருக்கும்போது அடியேன் இப்படிக் கூறலாமா என்று சிலர் இங்கு சங்கிப்பர்.

அது சரியன்று; அடியேன், இதை ஆரம்பிக்கும்போது அது இருப்பது தெரியாது. கிடைத்த பிறகும் நடுவில் பல அதிகாரங்களில் அது இல்லை. ஆகையால்—"முதன் முதலாக உரையிடுகிறேன்"—என்று மங்கள ச்லோகப்ரகரணத்தில் அடியேன் முன்பே எழுதியதை அமங்களமாக மாற்றவேண்டாம் என்று கருதினேன். மேலும், அந்த ஸ்வாமியும் அடியேனும் காலத்திலே சிறிதே முற்பாடு பிற்பாடு உடையவர்களாகையாலே, இருவரையும் ஒக்க நவீனர்கள் என வைத்துக்கொண்டால்—எம் இருவரையும் விட வேறு தடஸ்தர்களான பூர்வாசார்யர்கள் யாரும் இதற்குமுன் இதை வ்யாக்கியானிக்கவில்லை என்ற கருத்திலே அவ்வாறு அடியேன் கூறினேனுகவுமாம். அல்லது—பரமதபங்கம் முழுவதுக்கும் முதலில் பூர்ணமாக உரையிட்டது அடியேனே என்றும் கொள்ளலாம்.

இவ்விதமிது செல்லா நிற்க—நடுவில் அடியேன் வாராணஸி (காசி) செல்ல நேரிட்டது. வேதாந்த வித்யாப்ரவசநத்திற்காக அங்குள்ள ஸம்ஸ்க்ருத விச்வவித்யாலயத்திலிருந்து வெகுநாளாகவே அழைத்தார்கள். தூரத்வாதி தோஷத்தை எண்ணி வாளாவிருந்த அடியேனை முன்னம் க்ரந்தம் இயற்ற ப்ரேரித்த அந்த மஹனீயரே, மீண்டும் அங்குச் செல்லத் தூண்டினுர். மஹா மஹோபாத்யாயரான ஒரு சாஸ்த்ரிவர்யரும் சேர்ந்து நிர்பந்திக்கவே அங்குச்சென்று தங்கும்படியாயிற்று. அதனுல் இது தடைபட்டது. ஆனுலும், இரவிலாவது இதைத் தொடாமல்—தொடராமல் தினசூந்யமாக இராது நடத்தியே வந்தேன். ஒரு விதத்தில் அங்கு சென்றது—இந்த க்ரந்த விரசநகைங்கர்யத்திற்கு புஷ்டி தந்தது என்றும் சொல்லலாம். பல பௌத்த ஜைநாதி க்ரந்தங்கள்; அம்மத பண்டிதர்கள் அங்கு உண்டாகையால், அம்முகமாக இதில் பல பரிஷ்காரங்கள் செய்யமுடிந்தது. இதுவுமொரு சரண்யன் க்ருபையாகும். பத்து வருஷ காசிவாஸத்தின் நடுவே, ஸ்ரீகங்கையின் கரையிலே இதைக்கரைகண்டு நிறைவேற்றினேன்.

இனி இப்போது இதன் வெளியீட்டைப்பற்றி சிறிது விளக்குகிறேன். உரையின் கோடியில் எழுதியுள்ளேன். "என் கைத்தினவினுல் பேனு பிடிக்க அதனுல் பிறந்த இந்த க்ரந்தத்தை நான், வெளியிடவேணுமென்று பிறர் யாரையும் வேண்டமாட்டேன்" என்று, அதற்குச்சேர மௌனமாகவே இருந்துவிட்டேன். க்ரந்தமும் பெட்டியில் நன்கு உறங்கிக் கொண்டிருந்தது. பிறகு—இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு ஸமயத்தில், ஸ்ரீ உத்தமூர் ஸ்வாமி ஒரு ஸ்ரீமுகம் அடியேனுக்கு எழுதி அடியேனுடைய உரையை வரவழைத்துக் கடாக்ஷித்து விட்டு—"உனது உரையைப் பார்த்தேன். இதை ஏன் வெளியிடவில்லை? என்ன தயக்கம்? என்று அடியேனைக்கேட்க, வெளியிட இயலாமைக்கு சில ஹேதுக்களை அடியேன் விண்ணப்பம் செய்ய, அதற்கெல்லாம் அவர் பரிஹாரம் சொல்லி அடியேனை

உத்ஸாஹம் கொள்ளச்செய்தருளினர். தமது தளர்ந்த திருமேனி நிலையிலும், தாமே முன்னின்று சுமார் 150 பக்கங்கள் வரை அடியிலிருந்து அச்சிட்டு அநுக்ரஹிக்கவும் செய்தார். (இதன் விவரம் இங்குள்ள அந்த ஸ்வாமியின் ஸ்ரீ முகத்தில் விளக்கப்பட்டுள்ளது.)

இந்த முதல் பாகத்தின் வெளியீட்டை ப்ரஸ்தாவிக்குங்கால்—அடியேனுடைய தலையாய அஞ்ஜலிபந்தத்திற்கு அர்ஹராய் இருப்பவர்கள் இரண்டு ஸ்ரீ அழகிய சிங்கர்கள் ஆவர். அவர்களுள் – முதல் முலமானவர்—ஜகத் ப்ரஸித்தராய் – ஸதாசாரசீலராய், ஸ்வயம் பண்டிதோத்தமராய் பண்டித பக்ஷபாதியாய், பல பண்டித சிஷ்யர்களைப் பெற்றெடுத்த பெருமை பெற்றவராய் அத்யாத்ம வித்யையில் அடியேனுக்கு ஆழ்ந்த க்ஞானத்தைத் தம்முடைய குளிர்ந்த கடாக்ஷத்தினால் அருளியவரான ஸ்ரீமத் இஞ்சிமேட்டு அழகியசிங்கர் ஆவர்

மறுபடி இப்போது முன்கூறியவாறு வெளியீடு துவங்க—த்விதிய காரணமாக அமைந்தவர்—தம்முடைய ஜ்ஞானௌதார்யாதி கல்யாண குணங்களாலே அத்விதீயராய் ஸர்வ ஜநசித்தரஞ்ஜகராய், மஹாபாகராய் தற்போது 44வது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கராகும். அன்னார் அநுக்ரஹித்தருளிய மூவாயிரம் ரூபாய்களே மூலதனமாக அமைந்து தற்சமயம் கார்யம் துவங்கும்படியாயிற்று.

ஸ்ரீ வைஷ்ணவ சிகாமணியாய்—புஷ்கரம், கல்கத்தா முதலிய இடங்களில் பகவத் திவ்யாலய நிர்மாண நிர்வாஹாதிகள் செய்யும் மங்கனிராம்சேட் குடும்ப நிதியிலிருந்து இரண்டாயிரம் ரூபாய்களும் கிடைத்ததை அவச்யமிங்கு குறிப்பிடவேணும்.

இவை தவிர—பம்பாய், சென்னை, டெல்லி, கல்கத்தா, திருவனந்தபுரம், மதுராந்தகம் முதலிய இடங்களிலுள்ள நம் ஸம்ப்ரதாய ச்ரத்தையுடைய, பேரன்பர்களான பல பல ஸ்வாமிகள், ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி கௌரவாதிகளாலே உபசரித்தமையையும் நன்றியுடன் கூறக்கடமைப்பட்டுள்ளேன். கோடை மழைக்கொடைவள்ளலான பம்பாய் ஸ்ரீராமாநுஜ ஐய்யங்காரை இங்கு—அவச்யம் குறிப்பிடவேண்டும்.

ஸ்ரீமத் இஞ்சிமேட்டழகியசிங்கரின் பூர்வாச்ரமத் திருப்பேரனாரும், எனது அன்பரும் ந்யாயசிரோமணியும் சிறந்த வேதாந்தவித்வானும், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா—பத்ரிகையின் ஆசிரியரும் ஆன நடாதூர் புரிசை க்ருஷ்ணமாச்சாரியர் பழையபத்ரிகைகளில் எனது உரையுடன் இந்த க்ரந்தத்தை வெளியிட்டு வந்தார் என்பதை மறக்கவியாலாது. அவர் அப்போது செய்த உதவியின் மதிப்பு சுமார் ரூபாய் மூவாயிரம் —நாலாயிரமாகும் என்னலாம். அப்பொழுது சார்வாக பங்காதிகாரத்திலிருந்து ஆரம்பித்து வெளிவந்தது.

இனி இந்த க்ரந்தத்தினுடைய பதிப்பின் அமைப்பைப்பற்றிச் சிறிது சொல்லவேண்டியுள்ளது. கேளுங்கள்.

"ஸ்ரீந்ரு—ப்ரியா" மூலம் சுமார் 180 பக்கங்கள் முன்பே வெளிவந்தன என்று சொன்னேன். முதலாவதான ப்ரஸ்தாவநாதிகாரத்திலிருந்தன்று. ஆறுவதாகிய சார்வாகாதிகாரத்திலிருந்துதான். அடியிலிருந்து ஆரம்பிப்பது இடையூற்றைத்தரும் என்றும், அடியில் உள்ள அதிகாரங்கள் நமது ஸித்தாந்தத்தில் பழக்கப்பட்ட ஜீவ, அசித், ஈச்வர விஷயங்களைப் பற்றியவை என்றும், "பரமதபங்கம்" என்ற பெயருக்குச்சேர புதியதான பரமதம் ஒன்றையே முதலில் வெளியிடுவோம் என்றும் கருதி அப்படி வெளியிட்டேன். அப்படிச்செய்தும் இவ்வளவு இடையூறு நேர்ந்துவிட்டது. ஏதோ சில காரணங்களாலே பிறகு இவ்வெளியீடு நின்றுவிட்டது.

இப்போது வெகுநாட்களுக்குப்பின் 1976-ஆம் ஆண்டு, முன் சொன்னவிதம் ஸ்ரீஉத்தமூர் ஸ்வாமி மூலமாக சுமார் 148 பக்கங்கள் வரை அடியிலிருந்தே அச்சாகத் துவங்கியது. ஸ்ரீஸ்வாமி, தனது தள்ளாத தசை, சிஷ்யர்களுக்கு ப்ரவசநம் என்ற இடையூறு களுக்கிடையேயும், அடியேனிடம் உள்ள பரமக்ருபையினுலும், ஸ்ரீதேசிக க்ரந்த கௌரவத் தாலும், "ப்ருப்" சோதநம் முதல் எல்லாம் முடித்து எடுத்த பணியை ப்ரகாசமாகச் செய்தருளினுர்.

அடுத்து—77ஆம் வருஷம் அடியேன் வாராணஸியிலிருந்து விலகி வேளச்சேரி, என்னும் இந்த சிற்றூருக்கே வந்து விட்ட படியால் அடியேனே, மிகுந்துள்ள பகுதிகளை வெளியிடத்துவங்கினேன். பரமதபங்கம் என்னும் மூல நூலுக்கு எனது உரை புதியதாக ஏற்பட்டது போல முத்ரணசோதநாதி பரிசயமும் அடியேனுக்குப் புதிய அநுபவமேயாகும். மேலும்—நோய்வாய்ப்பட்டு தற்சமயம், மிடுக்கின்மையால் மெலிந்தும் உள்ளேன். ஆக அடியேன் கவனக்குறைவாலே அச்சுப் பிழைகள் மலிந்துள்ளதை மஹான்கள் மன்னிக்க வேண்டும். வேகமாக வெளியிடவேண்டும் என்றெண்ணி, ஒரே ஸமயத்தில் வெவ்வேறு இடங்களிலும் அச்சிட நேர்ந்ததாலே "பக்கம். 1." என்று ஆரம்பித்தே சுமார் 3-4-அதி காரங்களிலே எண்ணிக்கை காணப்படுகின்றது. ஆயினும்—காண்பவர்கள் குழப்பமடை யாதபடி அட்டவணையிலேயே—அதற்குத் தகுந்த குறியீடுகள் செய்யப்பட்டுள்ளன. பல வருஷங்கள் இடையிட்டு இரண்டு தடவையாக அச்சானபடியால்— ஆரம்பத்திலேப்பில் — திருமண்—சங்கு—சக்ர—சிங்ஹங்களும் இரண்டிடத்தில் காணப்படும். எழுத்துக்களும், அளவில் வேறுபடும், இப்படிப்பல பல. அவற்றைப் பொறுத்தருளவேணும்.

அதுபோல்—இந்த க்ரந்தத்தில் எனது உரைப்பகுதியில் அடியிலே சுமார் 3.4-அதி காரங்களில்—மூலத்திலிருந்து சொற்களை (ப்ரதீகங்களை) எடுத்துக்காட்டுமிடங்களில— தமிழ்ச் சொற்களை—நாகர எழுத்தில் அச்சிட்டும், மேலே போகப்போக—அவ்வித தமிழ்ச் சொற்களை—தமிழ் எழுத்திலேயே அச்சிட்டும் இருக்கின்றேன். இந்த கோணலுக்கும் காரணமிருக்கிறது. அடியேனுக்கு அதை நிமிர்த்த நேரமும் தெம்புமில்லை. அதாவது— வடக்கே—வாராணஸியில் விச்வவித்யாலயத்தில், அடியேனுடைய ஆப்தர்கள் இதை அச்சிடமுயன்ருர்கள். அங்கு, தமிழ் தெரியாதாகையால், தமிழ் எழுத்தை நாகர எழுத்தாக மாறறவேண்டியதாயிற்று. சிறிது நாளில் அடியேனே இங்கு மாற்றப்பட்டு விட்டேன். மீண்டும் அதை மாற்றமுடியாதே அப்படியே விட்டு வைத்தேன்.

இவ்விதமாகவே-காலமாறுபாட்டாலும், ப்ரஸ்ஸுக்களின் மாறுபாட்டாலும், காகிதங் களின் வர்ணமும் கூட வேறுபட்டுத்தான் தெரிகிறது. மற்றும் பலவித வ்யத்யாஸங்கள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் அடியேனுல் தவிர்க்க முடியவில்லை.

இன்னுமொருவிஷயம் :—இந்த க்ரந்தம் மொத்தம் இருபத்திநாலு அதிகாரங் களுடையது. இப்போது இந்த முதல் பாகத்தில் பத்து அதிகாரங்கள் தான் அடங்கியுள்ளன. க்ரந்தம் முழுவதையும் ஒரே புஸ்தகமாக உரையுடன் வெளியிடுவது அஸாத்தியமானது. அப்போது சுமார் ஆயிரம் பக்கத்திறகும் அதிகமாகி, க்ரந்தம்-விஷயத்தில் மட்டுமல்லாமல்— உருவிலும் கனத்துததோன்றும். அதனுல் தான் இங்கு பாகப்பிரிவினை செய்ய நேர்ந்தது. இதில் பரிதாபதுக்குரிய விஷயம் என்ன வென்ருல்? பிரிவினை செய்யும்போது, க்ரந்தத்தை, நமதிஷ்டப்படி பாகம் பிரித்து அச்சிடலாகாது. மூல க்ரந்தத்தை இயற்றினவரின் தாத்பர்யம் என்ன இது விஷயத்தில்? என்று பார்க்கவேணும், அதில்லை என்ருல்—பாகம் பிரிப்பதில்

பொருத்தம் எங்குள்ளது? என்ருவது ஆராயவேணும். அதுவுமில்லை என்ருல் தான் சரி பாதியாக நமது விருப்பப்படி செய்யலாம்.

இங்கிலையில் —இங்கு முதலில் க்ரந்தத்தின் ஆரம்பத்தை ப்ரஸ்தாவித்து, பிறகு முறையாக —ஜீவன், அசேதநம், ஈச்வரன் என்ற மூன்று தத்துவங்களை ஆராய்ந்து, ஐந்தாவதாக—பிற மதங்களில் திரண்ட பொது வானதோஷங்களைக்காட்டி, ஆறில்—சார்வாகனைச் சிதைத்து, பிறகு நாலு அதிகாரங்களில் முறையாக நால்வகை பௌத்தர்களைப் பெயர்த்துத் தள்ளி பத்து அதிகாரங்களை முடித்திட்டார் மூலகாரர். ஆக இங்கு அடியேனும் இந்த பத்துகளைக்கொண்டு முதல் பாகத்தை முடித்தேன் என்னலாம்.

ஆயினும், பதினேராவது அதிகாரத்தையுமிதில் சேர்த்து அச்சிடுவதே பொருள் பொருத்தமுடையதாக இருக்கும். பதினென்றில்—ப்ரச்சன்ன பௌத்தர மதம் பேசப் படுகிறது. ஆகமேலெழுந்தவாரியாக நோக்கினும் பத்தாவதோடு பௌத்தர் தொல்லை தீரவில்லை. பதினென்றிலும் உண்டு என்று தோன்றுகிறதல்லவா. யார் அந்த பௌத்தர்? சங்கரரே ஆவார். அவர்—பசுத்தோல் போர்த்து புலிப்பாய்ச்சல் பாயும் கணக்கிலே—வைதிகவேஷத்தில் வந்து பௌத்த பாஷையையே தமது பாஷ்யத்திலிட்டார். அதனுல் அவர் மதம்—ப்ரச்சன்ன (மறைக்கப்பட்ட) பௌத்த மதம் என்றதாயிற்று. ஆகையால் அதையும் இதில் சேர்த்திருக்கவேணும். அதற்கும் பிறகு ஜைனர் மதம், அதுவேறு விஷயம். ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்கே இந்த க்ரமத்தில்தான் திருவுள்ளம். "...ஓர் பிரமப்பிச்சியம்புகின்ற, போதங்கழிந்தவனைப் புத்தர் மாட்டுடன் பூட்டுவமே" என்று அங்கேயே அருளிச் செய்கிருர் ப்ரச்சன்ன பௌத்தாதிகாரத்தில்.

ஆனுல்—அடியேன் என்ன செய்ய ? க்ரந்தத்தின் பொருளமைப்பு இப்படியிருந்தாலும், அடியேன் கையில் பொருளமைப்பு அடியோடு வரண்டுவிட்டது. ஓர் பெரிய அதிகாரம் அச்சிடுவதென்ருல்—ஆயிரத்திற்கும் அதிகமாகப் பணவசதி தேவைப்படும். அதில்லை அடியேனிடம், ஆக பிரமப்பிச்சியம் புகின்றபோதங்கழிந்தவனை, புத்தர் மாட்டுடன் பூட்டாமலேயே—ஒற்றை மாட்டுடன் பூட்டி வண்டியை ஓட்டுகின்றேன். ஐயோ! ஒற்றை மாட்டுவண்டியா ? என்று பெரியோர்கள், பாவமும், பாசமும் பார்க்கவேண்டாம். கொழுத்த காளை கட்டிய ஒற்றை வண்டி, ஏறித்துகையுங்கள், கொழுப்பை அடக்குங்கள்.

ஆக இவ்வளவால் இதற்குமேல்—அச்சிடஸித்தமாக - பேச்சும் மூச்சுமின்றி பதினன்கு அதிகாரங்கள் அடியேனிடம் ஆழ்ந்து உறங்கிக்கிடக்கின்றன—என்றும் சொன்னதாயிற்று. தோழிமார் வந்து துயில் எழுப்புவார்களோ? அல்லவோ? அறியேன். பெற்றுப் பெயரிடுவது மாத்திரம் செய்தேன்—பார்ப்பவர்களோடு இதற்கு பாணிக்ரஹணம் செய்துவைக்க சக்தியில்லை அடியேனுக்கு.

இரண்டாவது பாகத்தில் -- மூலமே—நாமிதுவரை கேட்டறியாத பரமதங்களைப் பேசிப் பரவசமாக்கும் தன்மையது. அதற்கும் மேலாக அடியேனும்—மிக மிக உழைத்து—நாநாவித பரமத விஷயங்களை எல்லாம் கூட்டி, நவரத்ந கவசம்போல உரையிட்டு மேன்மேலும் ரஸத்தை வளர்த்துள்ளேன். முதல்பாகத்தின் வெளியீடு நடைபெற்ற அவலத் தனத்தைக் கண்ட அடியேன். இரண்டாவதின் வெளியீடு பற்றிப் பேசுவதுகூட சுத்த அசட்டுத்தனம் ஆகும். ஆட்டிடையன் கண்ட கனவுபோலாகும். அன்றிக்கே—ஸர்வநிர்வாஹகனன ஈச்வரன் இருக்கும்போது, அடியேனுடைய அயோக்யதாநுஸந்தானத்தாலே—இது நடவாது —என்று சொல்லவும் அடியேனுக்கு உரிமை ஏதும் கிடையாது என்னவுமாம்.

ப்ரார்த்தித்த உடனேயே ஸ்ரீமுகம் அநுக்ரஹித்த ஸ்ரீமதழகியசிங்கர் திருவடிகளில் அனந்த ப்ரணாமங்களை ஸமர்ப்பித்துக்கொள்கிறேன். இவ்வாறே—உதவியிருளிய ஸ்ரீ உ.வே. உத்தமூர் ஸ்வாமி ஸந்நிதியிலும் என்றும் நன்றியுடையேனுவேன். ப்ரியஸுஹ்ருத் ஸ்ரீ உ.வே மேல்பாக்கம் ஸ்வாமிக்கும் என் நன்றிகள்.

இனி அடியேனுடைய பேச்சை சீக்கிரம் முடித்துக்கொள்ளுகிறேன். இந்த க்ரந்தத்திற்கு முன் பின் சேர்க்கவேண்டிய சில பகுதிகளை வழக்கத்தை ஒட்டி சேர்த்துள்ளேன். இதற்காக அடியேனுடைய உடல் நிலையில் அதிகம் உழைக்கமுடியவில்லை. அதனால்—மதுராந்தகத்தில் அடியேனுடன் கலாசாலையில் வெகு நாள் போதகராயிருந்து பரமஆப்தரானவரும், மஹா வையாகரணரும், ஸரள ஸரஸ கவிதாவிஹார பூமியாக இருப்பவரும் இம்மாதிரி விஷயங் களில் முன் அநுபவம் உள்ளவருமான ஸ்ரீபாதூர்—புராணம், ஸ்ரீ உ. வே. ராகவாச்சாரிய ஸ்வாமியை வேண்டிக்கொண்டேன். அந்த ஸ்வாமியுமிதை உகந்து ஏற்று ப்ரமாணத் திரட்டு, விஷயஸூசிகை, பாடத்திருத்தம் முதலியன செய்து முடித்திட்டார்.

இவ்விதமாக பாதூர்ஸ்வாமி உழைத்து அடியேனுக்கு உதவிசெய்திருப்பதற்கு—அந்த ஸ்வாமியின் திறத்தில் அடியேன் என்ன சிறந்த பதிலுதவி புரிந்துவிடமுடியும்? ஈரமான நெஞ்சுடன் அந்த ஸ்வாமியின் திருநாமத்தை இதில் இங்கே பொறிப்பது தவிர. நிற்க—அந்த ஸ்வாமியுடன் ஒரு நீராகப் பொருந்தி நின்று உழைத்து, இந்தப் பகுதிகளை உருவாக்கிய அடியேன் மைத்துனனும், ந்யாய சிரோமணியும், வேதாந்த வித்வானும் மேற்படி கலாசாலை ந்யாய உபாத்யாயரும் உபந்யாஸகனும் ஆன—தெய்யார் ரங்கராஜாச்சாரிய ருக்கும் என்னுடைய அன்பான ஆசீர்வாதங்கள் அமையட்டும்.

ப்ரமாணங்கள் அகரவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன. அதில்—அவை ஏற்பட்ட முதல் நூற்களின் குறிப்பை (ஆகரத்தை) முழுதும் தரவியலவில்லை. ஆயினும் அதனால் அதிகக்குறையில்லை. அடியேனே இந்த உரை நூலில் அவை ஏற்பட்ட விவரங்களை அநேக மாகக்கொடுத்திருக்கிறேன். நெ. 1, என்றே ஆரம்பித்து 3-4 இடங்களில் பக்கங்களைக் கணக்கிட்டிருப்பதால்—பார்ப்பவர்களுக்குக் குழப்பம் நேராமலிருக்க—அந்தந்த அதிகாரங் களின் முதலெழுத்தையும் கூடச் சேர்த்திருக்கிறது.

இந்த க்ரந்தத்தை அடியேன் தனித்து அச்சிடத்துவங்கிய காலத்தில்; ஏன்?—இன்றும் கூட இந்த நகரத்தை அறியாத அடியேனுக்கு—உதவியாக 4-5 பாரங்கள்வரை அச்சிட, முத்ரணாலய ஸௌகர்யங்கள், மாத்ருகை திருத்துதல் இவற்றை ச்ரத்தையுடன் செய்து தந்த—அடியேனுடைய ப்ரியமித்ரரும் ஸாரஸாரஜ்ஞரும் ந்யாய வேதாந்தநிபுணரும், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா" ஸம்பாதகரும், உபந்யாஸகருமான திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாச் சார்யரை அடியேன் வாழ்த்திப்போற்றுகிறேன்.

இங்கேயே முன்பு அடியேன் குறிப்பிட்ட பொருள்தொகை—அடியேன் கைக்குவந்து சேரகடகராக இருந்த, இந்த நரஸிம்மராகவாச்சார்யர், நாவல்பாக்கம் வித்வான் ஸ்ரீரங்கநாதாச் சாரியர்(கல்கத்தா—ஸ்ரீ வைகுண்டநாதன் ஸந்நிதி) அடியேனுடைய அநுஜனும் ந்யாயவேதாந்த விசாரதனும், ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தானவித்வானும் உபந்யாஸகனுமாகிய வில்லிவலம் க்ருஷ்ணமாசார்யன் இவர்களையும் மிக்க நன்றியுடன் நினைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தக்ரந்தம் பல முத்ரணாலயங்களில் பல ஆண்டுகளாக அச்சாகிவந்தபோதிலும்—இப்போது கடைசியில்—ரத்நம் ப்ரஸ், சென்னை-1. உரிமையாளர் ஸ்ரீநிவாஸன் அவர்களால் பெரும் பகுதியும், திருவல்லிக்கேணி—ஸ்ரீரங்கராஜ் எண்டர்ப்ரஸ் உரிமையாளரால் சிறிய பகுதியும் அச்சிடப்பட்டது. அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக. சுபம்.

வேளச்சேரி,
15-4-78 }

வில்லிவலம் நாராயண தாஸன்.

श्रीः

मूले व्याख्यायांच विरचिता विशेषविचाराः

*11. अयञ्चविषयः-सर्वथानुपपत्त्याधिकरणश्रुतप्रकाशिकायामपि--अन्येषां पक्षखण्डनावसरे—मातृशरीरं प्राप्तात् कर्मणः "प्रथमं हृदयवस्तु, स्त्रीन्द्रियपुरुषोन्द्रिययोरन्यतरसचिवोऽष्टद्रव्यकलापः "इत्यादिना बौद्धमतसङ्क्षेपे प्रदर्श-तेस्म ।

श्रीः

समूलग्रन्थायां श्रीदेशिकाशयप्रकाशव्याख्यायामुद्धृतप्रमाणग्रन्थकर्तारः ॥

ॐ

समूलग्रन्थायां श्रीदेशिकाशयप्रकाशव्याख्यायां तत्रतत्र प्रकाशितन्यायविशेषाः

—:*:—

ஸ்ரீ :

श्रीमते निगमान्त महादेशिकाय नमः

முதல் பாகத்தில் அடங்கியுள்ள அதிகாரங்கள்

श्रीमते श्री लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीः

தனியன்கள்

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी । वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥
रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणम् । श्रीमद्वेङ्कटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

* * * * *

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
ரஹஸ்யங்களில் பதினான்காவது ரஹஸ்யம்

பரமதபங்கம் परमतभंगः

முதலாவது ப்ரஸ்தாவநாதிகாரம்

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

श्रीमते रामानुजाय नमः ॥ श्रीमते वेदान्तगुरवे नमः ॥

॥ देशिकाशयप्रकाशाभिख्या व्याख्या ॥

प्रथमः प्रस्तावनाधिकारः १.

पत्युः पद्मालयायाः प्रणमदनुविधौ दीक्षितस्याऽऽर्तिहन्तुः
पद्माभे पादयुग्मे प्रणिपतनपरः श्रीनृकण्ठीरवस्य ।
प्राप्याहं तस्य चाऽऽज्ञामवहितमनसा तद्दयापूर्णपूरैः
संस्पृष्टस्साहसिक्यां परमतदमनव्याक्रियायां प्रवर्ते ॥ १ ॥

विशुद्धज्ञानवैराग्यमूर्तयेऽनन्तकीर्तये ।
तस्मै नमोऽस्तु कस्मैचिन्निगमान्तार्यसूरये ॥ २ ॥

रमां रम्यां स्वाङ्के दरदलितपङ्केरुहनिभे निविष्टामाश्लिष्टो नरहरिरयं यस्य कृपया ।
मदुक्तिं तां पूर्णप्रपदनविधिं गर्भितवतीं स्वयं शुश्राव श्रीनृहरियतिराट् सोऽनिजयति ॥ ३ ॥

वेदान्ते वावदूकस्त्वमिह भुवि भवेत्यादरात् योऽन्वगृह्णात्
बालं मालोलविद्वत्सदसि शुकमुखोद्गीर्णसूक्तिक्रमान्माम् ।
स श्रीश्रीरङ्गयोगीड् मम निगमशिरश्शासकस्सर्ववेदी
चित्तालम्बं विधत्तां हृदि निखिलतमःकर्दमान् अर्दयन् द्राक् ॥ ४ ॥

परमतभङ्गव्याख्यामाख्यात्यधुना प्रकाशिकाभिख्याम् ।
देशिकचरणपरायणनारायणनामकः सोऽयम् ॥ ५ ॥

परमतभङ्गः पूर्वैरव्याख्यानादतीव चास्पष्टः ।
मणिरिव मलिनः सोऽयं विमृश्यते प्रथमतो हि मया ॥ ६ ॥

नभसीव निरालम्बे नृत्यन्ती मम भारती ।
निगमान्तगुरोर्दृष्ट्या नैव भूयात् स्खलत्पदा ॥ ७ ॥

यथामति यथाशक्ति यतिष्ये भाववर्णने ।
यद्यपि स्यात् त्रुटिः काचित् क्वचित् तदपि शोध्यताम् ॥ ८ ॥

अन्यत्र सिद्धान् सारार्थान् सङ्कलय्य विवक्षतः ।
नातिभारो ममास्तीव प्रश्नतः कुसुमोच्चयान् ॥ ९ ॥

इह खलु निखिलजगद्रक्षणदीक्षितस्य दयानिधेर्देवदेवस्य श्रीमन्नारायणस्य दिव्यचरणारविन्दपरिचरणं सर्वदेशकालावस्थास्वपि कर्तुमर्हे जन्मनि जातानपि मानवान् अनाद्यज्ञातिलङ्घनापराधेनापोढतादृक्फलान् प्रेक्ष्य दयमानमनास्तत्रभवान् आचार्यः कृपामात्रेण प्रसन्नः, तेषां तत्त्वविषये अज्ञानान्यथाज्ञानविपरीतज्ञानादिकमेवास्यानर्थजातस्य निदानं मन्वानः, तद्विषये तेषां मनःप्रसादसिद्ध्यै प्रसन्नमधुरं भावगम्भीरं निबन्धरत्नं श्रीमत्परमतभङ्गाख्यम् अभङ्गुरं व्यधत्त । स्वपक्षरक्षणे पर्याप्ततां प्राप्तैरपि स्वीयैरन्यैः पाद्शतप्रबन्धैः परपक्षाणामपुनरुदयं समुन्मूलनं न कृतमित्यमंस्त । न च तन्नावश्यकम् ; यतो मितम्पचाः प्राबल्यतौल्यादिभ्रमेण वेदान्तसिद्धान्तं विमतानां मतैर्विहतं विकलितं वा मन्यमानाः परमपुरुषार्थावाप्तिं विना विनश्येयुः । तथाच श्रीभाष्यम्, "इतरथा कस्यचिन्मन्दधियः तेषां पक्षाणां युक्त्याभासमूलतामजानतः प्रामाणिकत्वशङ्कया वैदिके पक्षे किञ्चित् श्रद्धावैकल्यं जायेतापि" इति । न चेममंशं शतदूषण्यादिश्चरितार्थयति । "प्राज्ञा यथोदितमिदं शुकवत् पठन्तः प्रच्छन्नबौद्धविजये परितो यतध्वम्" इति तस्य परमतविशेषनिराकरणमात्रपरत्वात् । सर्वार्थसिद्ध्यादेरपि प्रायः स्वपक्षप्रतिपादनैकपर एव दृश्यते । तदुक्तं **वादिभीकरगुरुणा सप्ततिरत्नमालिकायाम्**, "सर्वार्थसिद्धिः शतदूषणी च द्वे लेटशस्त्रे कथकाग्रगानाम् । आद्येन तत्र क्रियते स्वरक्षा प्रत्यर्थिभङ्गः कलहेऽन्यतः स्यात्" इति । अत एवात्र ग्रन्थान्ते अस्यान्यैरचरितार्थत्वमाचार्या एवाहुः—पोन्नयिन्दै गिरिङ्ग् गुणाढ्

अपास्यतु तमः पुंसामनपायप्रभान्वितः । अहीन्द्रनगरे नित्यमुदितोऽयमहस्करः ॥

1 அபாஸ்யது தம: பும்ஸாமநபாய ப்ரபாந்வித: |
அஹீந்த்ரநகரே நித்யமுதிதோऽயமஹஸ்கர: ||

पुणराद परमतप्पोर् पूरित्तोमे" इति । इदञ्चास्यापूर्वित्वमत्रैव विस्तरशः क्रियमाणं वैय्याकरणादिमतभङ्गमपि विलोकयतामतिरोहितं भवति ।

क्रियतां तर्हि देवभाषया ग्रन्थविशेषः, न त्वेवं मणिप्रवालभाषयेति चेत्—न । शृणु तत्र कारणम् । मण्युपहितप्रवाळवदतिमनोहरत्वात् मणिप्रवाळनाम्नैव प्रसिद्धयाऽनया शैल्या विरचनात् भाषाद्वयमयप्रमाणोपन्यसनाय सम्पन्नं सौकर्यम् । अन्यथा ग्रन्थस्य शुद्धसंस्कृतमयत्वे द्रमिडोपनिषद्वागुत्कीर्तनं सर्वथा परिहरणीयं भवति, यथा दूषण्यादौ । देवभाषया विपरिणमनीयं वा भवति, यथा तात्पर्यचन्द्रिकादौ । तत्र हि सप्तदशाध्याये—"वानुळार् अरियलाहा" इत्यादिभक्ताङ्घ्रिरेणुगाथा—"दिव्यैरवेद्यविभवेति" इति पद्येनानूद्यते स्म । अतोऽयं निबन्धस्तादृशनिर्बन्धविरहात् यथायथमुभयवेदान्तवाक्यान्यपि तत्तदानुपूर्व्यैव प्रदर्शयन् सहसैव सर्वसहृदयचेतांसि चमत्करोति । अयञ्च ग्रन्थः श्रीदेशिकचरणीयेषु द्वात्रिंशति रहस्येष्वन्यतमः । रहस्यत्रयसारादिवत् आद्यन्तयोरधिकारार्थसङ्ग्रहगाथावैशिष्ट्यात् मणिप्रवालभाषामयत्वाच्च । अयञ्चेत्थं प्रवृत्तः—आदौ प्रस्तावनामनु, "भोक्ता भोग्यम्" इति श्रौतक्रमानुसारेण स्वमते जीवाचेतनेश्वरतत्त्वानि निरूप्य पश्चात् परमतमेकस्मिन्नधिकारे समुदायतः, बहुषु विशेषतश्च निराचकार । अन्ततो निगमयामास च । एवञ्चायमद्भुतोऽपूर्वभावगम्भीरगुम्भो ग्रन्थराजो विना दम्भं आचार्यसन्निधौ विनीतैः श्रोतव्य इति अस्मदाचार्या अस्मान् आदिशन्ति । "प्रधानदूष्यांशत्तैत्तेळियक्कनु", "प्रधानदूषणांशत्तैयुं तत्त्वविदाचार्योपदेशत्ताले तेलिन्दु" इति । अत्र—"दूष्यांशत्तै तेळियक्करु" इति सामान्योक्त्या पूर्वपक्षग्रन्थस्याध्ययने वक्तृनियमाभावस्सूच्यते । अत एव हि पुरा भाष्यकृदादयः पूर्वपक्षग्रन्थान् पूर्वपक्षिणां यादवप्रकाशादीनां सविध एवागृह्णन् ।

एतत्प्रबन्धप्रणयननिमित्तविषयमैतिह्यविशेषं **श्रीकाञ्ची-कृष्णताताचार्याः** (अय्यास्वामिनः) स्वव्याख्यायामेवमाहुः-शिङ्गरुगोविन्दनायिनार् नामकः परमतवासनावासितहृदयः कश्चित् कदाचित् काञ्चीमेत्य तत्रत्यैरस्मत्सम्प्रदायविद्भिर्विवदितुमारभ्य कथञ्चिदन्ते तैश्शमितप्रायसन्देहसन्दोहोऽपि, निश्शेषनिरासाय आप्तैरहीन्द्रनगर्यामाचार्यान् प्रापितः सर्वं शुश्राव शास्त्रार्थम् ; शिक्षितार्थश्च बभूव । तदा चाचार्योऽपि स्वोपन्यस्तं सर्वं त्रिभुवनाथानुज्ञां लब्ध्वा एतन्निबन्धरूपेण परिणमयामास शतदूषणीवदिति ।

अथाचार्यः स्वप्रबन्धस्य निर्विघ्नपरिसमाप्तिप्रचयगमनाद्यर्थं शिष्टानुष्ठाननिष्ठं मङ्गळं नगराधिप-ने दिष्ट-त्रिभुवनाथप्रार्थनारूपं प्रबन्धादौ निबध्नाति-अपास्यतु इति । अत्र क्रियमाणपरमतनिराकरणानुगुणेयं प्रार्थना भवति । "या वेदबाह्याः स्मृतयो याश्च काश्च कुदृष्टयः । सर्वास्ता निष्फलाः प्रेत्य तमोनिष्ठा हि ताः स्मृताः" इत्युक्तं परमजनमनोगतं परमतोत्थं मोहान्धकारम् अयं ग्रन्थो विनिवर्तयत्वित्याशास्यते ।

अनेनैहैतन्निबन्धस्य भगवत्साम्मुख्यमप्यनुसंहितं बोध्यम् ; अनुपहतार्थावगमरूपप्रभापरिष्कृतत्वात् अहीन्द्रनगरे विरचितत्वात् तत्त्वज्ञानाख्यं यदहः तत्करत्वाच्चोक्तविशेषणत्रयवत्ताप्रतीतेः । अपास्यत्वि-त्यनेन--"समीरणश्चोदयिता भवेति व्यादिश्यते केन हुताशनस्य" इत्यादिरीत्या प्रसिद्धादित्यस्य तमोनिरसनाभ्यर्थननिरपेक्षत्वेऽपि इह भगवतः वैषम्यनैर्घृण्यादिपरिहाराय प्रार्थनमात्रप्रतीक्षत्वम्, "संसार-तन्त्रवाहित्वात् रक्षापेक्षां प्रतीक्षते" इत्यादिप्रसिद्धं द्योत्यते । मूलमन्त्रादिषु नमश्शब्द इवाऽऽदरा-तिशयादत्रापि—अपास्यत्विति प्रतिबन्धकनिरासांशप्रार्थनायाः प्राथम्यम् । प्रबन्धस्य, समस्तवाचक-जातप्रकृतिभूतमाङ्गलिकाकारोपक्रमत्वसिद्धये निरस्यत्वित्याद्यप्रयोगः । मणिमलप्रक्षालनन्यायेन प्रतिबन्धक-निवृत्तिमात्रादेव स्वाभाविकावबोधादिगुणगणाविर्भावोऽवश्यम्भावीति न स प्रार्थनीयः । तम इत्यनेन—'तमस्त्वज्ञानजं विद्धि', 'तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते' इति सर्वानर्थपरम्परानिदानभूताऽविद्या विवक्षिता । सा हि प्रथमसाधनं क्लेशानाम् । न केवलं गुणभूतं तमः । तदुक्तं शास्त्रकारैः—"तेषां मोहः पापीयान्, नामूढस्येतरोत्पत्तेः", "अविद्या क्षेत्रमुत्तरेषां प्रसुप्ततनुविच्छिन्नोदाराणाम्" इति । क्लेशानामिति तत्र विशेष्यम् । अत एवैतद्दशतमोनिवृत्तेस्सर्वपुरुषविषयेऽप्यपेक्षितत्वेन--अपास्यत्वित्यविशेषेण प्रार्थनम् । अनुकूलप्रतिकूलविभागमन्तराऽयमाचार्यो दयार्द्रहृदयः सर्वेषां मङ्गलं स्वयमाशास्ते, "स्वस्त्यस्तु विश्वस्य" इतिवादिप्रह्लादादिवदिति । एवं भगवति तमस्तरणोपायप्रार्थनायां क्रियमाणायां तत्रावश्यकपुरुषकार-सम्पत्तिं संदर्शयति--अनपायप्रभेति । "प्रभावान् सीतया देव्या", "अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा" इत्यादिवचनात् प्रभाऽत्र साक्षाल्लक्ष्मीर्विवक्षिता । अनपायशब्देन तस्या भगवति नित्ययोगं विवक्षता मणिप्रभादीनामिव कदाचिदपि विश्लेषप्रसङ्गराहित्यं द्योत्यते । प्रभान्वितः । तदन्वितत्व एव सोऽस्माकमाश्रयणीयो भवति । अन्यथा तु—"पितेव त्वत्प्रेयान् जननि! परिपूर्णागसि जने हितस्रोतोवृत्त्या भवति च कदाचित् कलुषधीः । किमेतत्? निर्दोषः क इह जगतीति त्वमुचितै-रुपायैर्विस्मार्य स्वजनयसि माता तदसि नः" इत्यादिरीत्या केवलं भगवान् अपराधिनामस्माकं अनभिगन्तव्यो भवेत् । मण्यादिर्हि स्वयं प्रकाशते, प्रभया अन्यानपि प्रकाशयति । तथाचाय-मप्यपूर्व आदित्यः अन्यस्य प्रकाशने तमोनिरसने च प्रभास्थानापन्नां परममहिषीं प्रतीक्षते । ननु तर्हि भगवान्—"प्रभावान् सीतया देव्या परमव्योमभास्करः" इत्येव हि गीयते । तथाच सागर-तीरगतस्य मेरुणेव, संसारिणामस्माकं विप्रकृष्टेनैतेन किं प्रयोजनं भविष्यतीत्यत्राह—अहीन्द्रनगर इति । "निवासशय्यासनपादुकांशुकोपधानवर्षातपवारणादिभिः । शरीरभेदैस्तव शेषतां गतैर्यथोचितं शेष इती-

---

பரமதபங்க மொழிபெயர்ப்பு

1. (அபாஸ்யது என்று ஆரம்பமான ச்லோகத்தின் கருத்து)—
இறையுமகலாத சோதி (பிராட்டி)யுடன் கூடி திருவயிந்திரை நகரில் நித்தமெழும் உதய சூரியனாகிய புருஷோத்தமன் மாந்தரின் மன விருளை நீக்குவானாக.

2 எண்டளவம்புயத்துளிலங்குமறுகோணமிசை
வெண்பணிலம் திகிரி வளைவில் வளைவாய் முசலம்
திண்கையிலங்குசம் சீர்திகழுங்கதை செங்கமலம்
எண்படை ஏந்திநின்றான் எழிலாழி இறையவனே 2

रिते(यते) जनैः" इति सर्वदेशकालावस्थास्वपि भागवतो दास्यकारी शेषाहिः श्रीरङ्गे पीठीभूयेवाल नगरीभूय पूर्वमेव तदागमनं प्रतीक्षमाणस्तिष्ठतीति भावः। अहीन्द्रनगरे। अनेन वनाद्रिवेङ्कटाद्र्या- दिव्यावृत्तिः। नागरिकस्य सदृशं नगरम्। नित्यमुदितः। बालसूर्यो ह्युदितो भवति। न नु मध्यन्दिनं प्राप्तः। अनेन दुष्प्रेक्षत्वादिदोषविरहात् सर्वदा सद्भिरभिगन्तव्यत्वं सूचितम्। अथवा नित्यमुदितः। राहुदिग्रहकृतग्रसनादिपीडावैधुर्यात् नित्यसन्तुष्ट इत्यर्थः। अयम्। इदानीं- परिदृश्यमानः। तथाच देशविप्रकर्षाभाववत्, स्वभावतः कालविप्रकर्षस्यापि विरहेणाऽऽश्रयणसौकर्यं सूचितम्। अहस्करः। न तु निशाकरः। स हि तु क्षहामसशाली सूर्यायत्तप्रकाशश्चेति भगवन- स्तद्विरुद्धस्वभावस्य तत्ता न संभवतीति भावः।

